**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 12** |
| **Name** | : | **திரு. அருண்குமார்** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **23.05.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது செல்லூர் மீனாட்சிபுரம், அழகாபுரி தெருவில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2015ம் ஆண்டு SAMSUNG கம்பெனியில் வேலை செய்தேன். அப்போது TV Service ற்காக புக் செய்திருந்தார்கள். அந்த கஸ்டமர் பெயர் வெங்கடேசன். 31.07.2015 அன்று நான் அவருக்கு போன் செய்து சர்வீசுக்கு வரலாமா என்று கேட்டபோது, வர சொன்னார்கள். வீட்டு அட்ரஸ் கேட்டேன். பைபாஸ் ரோடு, நேருநகர் என்று வெங்கடேசன் போனில் சொன்னார். நான் அங்கு மதியம் சுமார் 12.15 மணிக்கு அந்த இடத்திற்கு அருகில் சென்று, மீண்டும் போன் செய்து, வீட்டு முகவரி கேட்டு வெங்கடேஷ்க்கு போன் செய்தேன். டிவி சர்வீஸ்க்கு வந்திருப்பதாக சொன்னேன். நான் வீட்டிற்கு டிவி சர்வீஸ் செய்ய சென்றபோது, வீட்டில் ஒரு லேடீ இருந்தார். அவரிடம் நான், டிவி சர்வீஸ்க்காக புக் செய்திருந்தீர்கள், அதற்காக நான் வந்துள்ளேன் என்று சொல்லிவிட்டு நான் டிவி யை ஆன் செய்து பார்த்த போது, டிவியில் சவுண்டு வரவில்லை. படம் மட்டும் தெரிந்தது. அதற்கு பிறகு டிவியை திறந்து பார்த்த போது, ஸ்பீக்கர் பிரச்சனையாக இருந்தது. அவரிடம் நான் ஸ்பிக்கர் மாற்ற வேண்டும் என்று

சொன்னேன். எப்போது வரும் என்று என்னிடம் கேட்டார்., ஸ்பேர் வர 2 நாட்கள் ஆகும், ஸ்பேர் வந்த பிறகு 2 நாட்களில் வந்து மாற்றிவிடுவதாக அவரிடம் சொன்னேன். நான் வந்தற்கான விசிட்டிங் சார்ஸ் பணம் ரூ.170 க்கு ரசீது கொடுத்து 170 ரூபாய் பெற்றுக்கொண்டு சென்றுவிட்டேன். அதற்கு பிறகு அன்று மாலை SS காலனி போலிஸ் ஸ்டேசனில் இருந்து எனக்கு போன் செய்து, நான் டிவி சர்வீஸ்க்கு சென்ற போது வீட்டில் இருந்த பெண்ணை கொலை செய்துவிட்டதாக சொன்னார்கள். சர்வீஸ் முடித்து பிற்கல் சுமார் 12.45 மணிக்கு நான் அந்த வீட்டில் இருந்து கிளம்பினேன். அன்று மாலை சுமார் 05.30 மணிக்கு போலிசார் என்னை சம்பவ இடத்திற்கு கூட்டிச்சென்று விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

நான் வீட்டிற்கு சென்று, சர்வீஸ் முடித்து வர சுமார் 40 நிமிடங்கள் ஆனது. நான் சர்வீஸ் முடித்த போது சுமார் 01.00, 01.15 மணி இருக்குமா என்றால் சுமார் 12.50 மணிக்கு நான் சம்பவ இடத்தில் இருந்து கிளம்பிவிட்டேன். வீட்டிற்கு செல்வதற்கு முன்பு நான் வெங்கடேசனுக்கு எத்தனை மணிக்கு போன் செய்தேன் என்று சரியாக ஞாபகம் இல்லை. சுமார் 11.50 to 12.00,மணிக்கு போன் செய்திருப்பேன். அப்போது வெங்கடேசன் எங்கிருந்தார் என்றால் வெளியில் இருப்பதாக சொன்னார். மாலை நான் காவல்நிலையத்தில் எத்தனை மணி நேரம் இருந்திருப்பேன் என்றால் இரவு சுமார் 08.00, 09.00 வரை இருந்திருப்பேன். நான் காவல் நிலையம் சென்ற போது, வெங்கடேசன் அங்கு இருந்தாரா என்று பார்க்கவில்லை. போலிசார் என்னை காவல்நிலையம் கூட்டிச் சென்று விசாரித்த விபரம் அனைத்து செய்தி தாள்களிலும் வந்திருந்தது. போலிசார் என்னை அடித்து துன்புறுத்தினார்களா என்றால் இல்லை. அன்றைய தேதியே என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் அன்றைய தினமே வாக்குமூலம் வாங்கினார்கள்

அதற்கு பிறகும் 2,3 நாட்கள் விசாரித்து வாக்குமூலங்கள் வாங்கினார்கள். நான் சர்வீஸ்க்கு சென்ற வீட்டில் இருந்த பெண் என்ன கலர் ஆடை அணிந்திருந்தார் என்று நான் பார்க்கவில்லை. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது. மற்ற சம்பவங்கள் எனக்கு போலிசார் சொல்லித்தான் தெரியும்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை